### கிராமப்புற மாணவர்களுக்காக

# புரட்சிகரமான திட்டத்தை உருவாக்கியவர் முத்தமிழறிஞர் கலைஞர்!

## கல்வி உச்சி மாநாட்டில் அமைச்சர் கோவி.செழியன் பேச்சு!

**சென்னை, பிப். 3-**

**''கிராமப்புற மாணவர்களுக்காக புரட்சிகரமான திட்டத்தை உருவாக்கியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்'' என்று உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் அவர்கள் இந்தியா உலகளாவிய கல்வி உச்சி மாநாடு - 2026ல் பேசும் போது கூறினார்.**



சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற இந்தியா உலகளாவிய கல்வி உச்சி மாநாடு 2026இல் உயர்கல்வித் துறை அமைச்சர்முனைவர் கோவி. செழியன் அவர்கள் பேசியதாவது :

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அய்யன் திருவள்ளுவர் அவர்கள் 'கற்க' என கல்வியின் சிறப்பினை இம்மண்ணில் வலியுறுத்தியுள்ளார். இந்த மண்ணில் இந்த உலகளாவிய முதல் கல்வி உச்சி மாநாடு நடத்துவது சிறப்பு.

சிறப்புமிக்க உலகப் பிரதிநிதிகளே, துணை வேந்தர்களே, தொழில் துறைத் தலைவர்களே, புதுமை யாளர்களே, மாணவர்களே மற்றும் நண்பர்களே - வணக்கம். மனித மாண்புக்கும் சமூக முன்னேற்றத்திற்கும் கல்விதான் மிகவும் சக்தி வாய்ந்த உந்துசக்தி என்பதை நீண்ட காலமாக உணர்ந்துள்ள தமிழ் மண்ணில் நாம் இங்கு கூடியிருக்கிறோம். சென்னையில் UK, இந்தியாதேசிய மாணவர்கள்மற்றும்முன்னாள்மாணவர்சங்கம் (National Indian Students and Alumni Union (NISAU)) உடன் இணைந்து தமிழ்நாடு அரசால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, இந்தியா உலகளாவிய கல்வி உச்சி மாநாடு 2026 சிறப்பாக நடைபெற்று வருகிறது.

**உயர்கல்வியில் தமிழ்நாடு முன்மாதிரி!**

முதலமைச்சர் அவர்களின் 'நான் முதல்வன்', 'புதுமைப் பெண்', 'தமிழ் புதல்வன்' போன்ற சீரிய திட்டங்களினால் இந்தியாவிலேயே தமிழ்நாடு தான் உயர்கல்வியில் அனைத்து மாநிலங்களுக்கும் முன்மாதிரியாக திகழ்கிறது. 'கல்வியில் சிறந்த தமிழ்நாடு', 'இருமொழிக் கொள்கையை கொண்ட தமிழ்நாடு'; இது தான் தமிழ்நாட்டிற்கு பெருமை. அண்ணல் அம்பேத்கர் உயர்கல்வி உதவித் திட்டம் போன்ற திட்டங்கள், பட்டியல் சாதிகள் மற்றும் பழங்குடியினத்தைச் சேர்ந்த மாணவர்கள் வெளிநாடுகளில் உயர் படிப்புகளைத் தொடர உதவியுள்ளன.

எனவே, இந்த உலகளாவிய கல்வி உச்சி மாநாடு தமிழ்நாட்டில் நடைபெறுவது மிகப் பொருத்தமானது. சமூக மேம்பாடு, பொருளாதார முன்னேற்றம் மற்றும் மனித வள உருவாக்கம் ஆகியவற்றில் தமிழ்நாடு நீண்ட காலமாக ஒரு தேசியத் தலைநகரமாகத் திகழ்கிறது. தமிழ்நாட்டில் 61க்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்கள், கலை, அறிவியல், தொழில் நுட்ப மற்றும் தொழில்முறை கல்லூரிகளின் பரந்த வலையமைப்பு மற்றும் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கத்தின் வலுவான கலாச்சாரத்தைக் கொண்டுள்ளது. முதலமைச்சர் அவர்களின் முன்முயற்சிகளால் உயர்கல்வியில் மொத்த மாணவர் சேர்க்கை விகிதத்தில் (GER) 47%க்கும் மேலாக கணிசமாக உயர்ந்துள்ளது- இது தேசிய சராசரியை விட மிக அதிகம்.

முன்னாள் முதல மைச்சர் முத்தமிழறி ஞர் கலைஞர் அவர்கள் ஏழை, எளிய கிராமப்புற மாணவர்களுக்காக ஒரு குடும்பத்தில் முதல் பட்டதாரி மாணவருக்கு 5 சதவீதம் கூடுதல் மதிப்பெண் வழங்கும் புரட்சிகரமான திட்டத்தினை செயல்படுத்தி குடும்பத்தின் முதல் பட்டதாரியை உருவாக்கினார். மேலும், பொறியியல் கல்லூரி நுழைவுத் தேர்வை இரத்து செய்து கிராமப்புற மாணவர்கள் பெருமளவில் பொறியியல் படிப்புகளில் சேர வழிவகை செய்தார்.

தற்போதைய முதலமைச்சர் அவர்கள் மாணவர்கள் படிக்கும் போதே தொழில் முனைவோராக பயிற்சிப் பெற 'நான் முதல்வன்' என்ற திட்டத்தினை அறிமுகப்படுத்தினார். தமிழ்நாட்டு மாணவர்கள் இந்திய மாணவர்களுடன் அல்லாமல் உலக மாணவர்களுக்கு இணையான கல்வித் தரத்தினை கொண்டுள்ளனர். ஆஸ்திரேலியா போன்ற மேலை நாட்டு மாணவர்கள் தமிழ்நாட்டிற்கு வந்து ஆராய்ச்சிப் படிப்பினை மேற்கொள்கின்றனர். "கல்வித் தான் அறிவு ஒளியின் உச்சம்" என்ற உணர்ந்த முதலமைச்சர் அவர்கள் உயர் கல்விப் படிப்பிற்கு முக்கியத்துவமளித்து வருகிறார்.

**தமிழ்நாடு உலகை அழைக்கிறது!**

உயர்கல்வித் துறையின் ஒவ்வொரு நிகழ்வுகளிலும் முதலமைச்சர் அவர்கள் அனைத்து மாணவர்களும் கல்வி கற்பதை மட்டுமே செய்ய வேண்டும் மற்றவற்றை நான் பார்த்துக் கொள்கிறேன் என்று கூறி அனைத்து உதவிகளையும் செய்து வருகிறார். நமது முதலமைச்சர் அவர்கள் 2030ஆம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டை 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக மாற்றுவதற்கான ஒரு துணிச்சலான இலக்கை முன்வைத்துள் ளார்.

இந்த இலக்கை வெறும் உள்கட்டமைப்பு மூலம் மட்டும் அடைய முடியாது. ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்பது திறமையான மனித வளம், முன்னணி ஆராய்ச்சி, புத்தாக்கச் சூழல் அமைப்புகள், உலகளவில் போட்டித்தன்மை கொண்ட பல்கலைக்கழகங்கள் மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வாய்ப்புகள் ஆகியவற்றின் மீது கட்டியெழுப்பப்பட வேண்டும். எனவே, உயர் கல்வி என்பது ஒரு துணைத் துறை அல்ல, மாறாக டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தின் உந்துசக்தி ஆகும்.

இங்கு கூடியுள்ள அனைத்துப் பிரதிநிதிகளை யும், தமிழ்நாட்டின் முன்னேற்றத்தைக் காண்பதற்கு மட்டுமல்லாமல், கல்வி என்பது பகிரப்பட்ட செழுமையின் அடித்தளமாக மாறுவதற்காக எங்களுடன் பங்காளராக இணையவும் நாங்கள் வரவேற்கிறோம். நீதியுடன் கூடிய வளர்ச்சி, அனைவரையும் உள்ளடக்கிய புத்தாக்கம் மற்றும் அனைவருக்கும் வாய்ப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட திராவிட மாதிரியின் உணர்வில், இந்த எதிர்காலத்தை எங்களுடன் இணைந்து உருவாக்க தமிழ்நாடு உலகை அழைக்கிறது.

இவ்வாறு உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன் அவர்கள் பேசினார்.

---

### உலக நாடுகள் பலவும் பாராட்டும் வகையில்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் திட்டங்களைத் தீட்டி வருகிறார்!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் பேச்சு!

சேலம்,பிப.3-

தமிழ்நாடு பட்டுவளர்ச்சி துறை சார்பில் தமிழகம் முழுவதும் உள்ள 3050 பட்டு விவசாயிகளுக்கு 36 கோடியே 48 லட்சம் மதிப்பில் நவீன பட்டுப்புழு வளர்ப்பு தளவாடங்கள் மற்றும் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா சேலம் பெரியார் பல்கலை கழக கூட்டரங்கில் நடைபெற்றது.




சேலம் மாவட்ட வருவாய் அலுவலர் ரவிக்குமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் சுற்றுலாதுறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு பல்வேறு தளவாடங்கள் மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்கி தமது வாழ்த்துக்களை தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் அமைச்சர் ராஜேந்திரன் பேசும் போது, தமிழ்நாடு முதலமைச்சர் எல்லாருக்கும் எல்லாம் என்ற அடிப்படையில் சிறப்பான ஆட்சியை நடத்தி வருகிறார் என்றும் இந்தியாவிலேயே நம்பர் ஒன் மாநிலமாக தமிழ்நாடு மாறி இருப்பதற்கு முதல்வரின் நிர்வாக திறமை தான் என்று கூறிய அவர், 5 ஆண்டுகளில் 146 கோடி நிதி வழங்கி உள்ளார் என்று 25405 ஏக்கர் நிலப்பரப்பில் பட்டு வளர்க்க நடவடிக்கை மேற்கொள்ளபட்டு உள்ளதாகவும் இதில் 16 ஆயிரம் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். பட்டு உற்பத்தியை அதிகரிக்க மானியங்கள் அதிக அளவில் வழங்கப்பட்டு வருவதாக கூறி அதனை பட்டியிலிட்டார். மேலும் அவர் கூறுகையில் அனைத்து துறைகளையும் மேம்படுத்திட தமிழ்நாடு முதலமைச்சர் அனைத்து நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார் என்றும் தொழில் துறை முதலிடத்தில், ஜவுளி உற்பத்தியில் 50 சதவீகித பங்களிப்பு, என அனைத்து துறைகளிலும் முன்னேற்றம் அடைந்து வருவதாக பெருமிதத்தோடு கூறினார். 2030 ஆண்டுகளுக்குள் உலக அளவில் உள்ளது நாடுகள் போற்றும் வகையில் நம்பர் ஒன் மாநிலமாக மாற்றிட நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார். ஐ.நா. சபை மற்றும் பல உலக நாடுகளும் வியந்து பாராட்டும் வகையில் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வரும் தமிழ்நாடு முதலமைச்சருக்கு ஆதரவாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

நிகழ்ச்சியில் பட்டுவளர்ச்சி துறை இயக்குனர் சாந்தி, அரசு செயலாளர் அமுதவள்ளி, சேலம் மாநகர மேயர் ராமசந்திரன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

---

### பேரறிஞர் அண்ணா 57வது நினைவு நாளை முன்னிட்டு

# புதுக்கோட்டையில் அமைதி ஊர்வலம் - அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை!

## வடக்கு மாவட்டக் கழகத்தினருக்கு கே.கே.செல்லப்பாண்டியன் வேண்டுகோள்!

புதுக்கோட்டை. பிப்.3

புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே. செல்லப்பாண்டியன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:



காஞ்சி தந்த காவிய தலைவர். உலகத் தமிழர் உள்ளங்களில் எல்லாம் சிம்மாசனம் போட்டுக் கொலு வீற்றிருக்கும் செந்தமிழ் அறிஞர் தமிழ் மொழி உயர்வுக்காகவும், தமிழர்களின் மேம்பாட்டுக்காகவும், தமிழ்நாட்டின் சிறப்புக்காகவும் வாழ்நாளெல்லாம் ஓயாது பாடுபட்ட உத்தமர் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் தாரக மந்திரத்தை அரசியல் உலகத்திற்கு அறிமுகம் செய்து வைத்த ஆற்றலாளர் பேரறிஞர் அண்ணா அவர்களின் 57 வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு

இன்று (3.2.2026 - செவ்வாய்க்கிழமை) காலை 9 மணியளவில் புதுக்கோட்டை மாவட்ட தி.மு.க. அலுவலகத்திலிருந்து ஊர்வலமாகப் புறப்பட்டு சென்று பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது. அது சமயம் மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள் மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், செயல்வீரர்கள், கழக முன்னோடிகள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு தமது அறிக்கையில் கூறி உள்ளார்.

---

### பேரறிஞர் அண்ணா 57 வது நினைவு நாள்:

# கிருஷ்ணகிரி கிழக்கு - மேற்கு மாவட்டக் கழகத்தினர் திரண்டு வாரீர்!

## மாவட்டச் செயலாளர்கள் தே.மதியழகன் எம்.எல்.ஏ. - ஒய். பிரகாஷ் எம்.எல்.ஏ. அறிக்கை!

கிருஷ்ணகிரி, பிப். 3 -

கிருஷ்ணகிரி - கிழக்கு மேற்கு மாவட்டச் செயலாளகள் தே.மதியழகன் - ஒய்.பிரகாஷ் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-





காஞ்சி தமிழ் நிலத்தில் பிறந்த தென்னாட்டு காந்தி "பேரறிஞர் அண்ணா" அவர்கள். தந்தை பெரியாரின் சுயமரியாதைக் கொள்கைகளை பாமரனுக்கும் கொண்டுபோய் சேர்த்து, இந்திய துணைக் கண்டத்தின் அரசியலை தீர்மானிக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தை தோற்றுவித்து, உடன் அணிவகுத்த தம்பிகளுக்கு கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற தாரக மந்திரத்தை வகுத்துத் தந்து, பாசமிக்க அண்ணனாய் திகழ்ந்தவர். ஆண்டது இரண்டு ஆண்டுகள் என்றாலும் தாய் தமிழ்நிலத்திற்கு தமிழ்நாடு என பெயர்மாற்றம், இரு மொழிக் கொள்கை, சுயமரியாதை திருமண சட்டம் என அடுத்த ஆயிரம் ஆண்டிற்கான அடித்தளமிட்டவர். தமிழ் மொழி உரிமை, தமிழர் இனஉரிமை, மாநில உரிமை, பொருளாதாரத்தில் தன்னிறைவு என அவர் சிந்தனையின் விளைச்சலே இன்றைய அனைத்து துறையின் வளர்ச்சி அனைவரின் வளர்ச்சி எனும் "திராவிட மாடல்" ஆட்சியாகும்.

தமிழ்த்தாயின் தலைமகன் நம்மையெல்லாம் ஆளாக்கிய அண்ணன் பேறிஞர் அண்ணா அவர்களின் நினைவை போற்றும் வகையில் 57 வது நினைவு தினத்தில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இன்று (செவ்வாய்க்கிழமை) காலை மணிக்கு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளரும், பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் எம்.எல்.ஏ. தலைமையில்,


கிருஷ்ணகிரி, பெங்களூர் சாலை, சென்ட்ரல் தியேட்டர் அருகிலிருந்து அமைதி ஊர்வலம் சென்று கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களது திருவுருவசிலைக்கு மாலை அணிவித்து, மௌனஅஞ்சலி செலுத்தப்பட உள்ளது.

அதேபோல கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் பிரகாஷ் அவர்களது தலைமையில் கிருஷ்ண கிரி மேற்கு மாவட்டக் கழகம் சார்பில் இன்று காலை 9 மணி அளவில் ஓசூரில் அரசு மருத்துவமனை அருகில் இருந்து அமைதி ஊர்வலமாக சென்று அண்ணா அவர்களது திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மௌன அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது அது சமயம் கிருஷ்ணகிரி கிழக்கு & மேற்கு மாவட்டத்தை சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் தலைவர், துணைத் தலைவர், அமைப்பாளர், துணை அமைப்பாளர் உள்ளிட்ட நிர்வாகிகள், மகளிர் அணியினர், வார்டு, வட்ட, கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், BLA 2, BLC, BDA வாக்குச்சாவடி முகவர்கள், வாக்குச்சாவடி ஒருங்கிணைப்பாளர்கள், கழகத் தோழர்கள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டுமென அறிக்கையில் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர் .

---

# தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. அறிக்கை!



தஞ்சாவூர், பிப். 3-

தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் கும்பகோணம், சாக்கோட்டையில் நடைபெற உள்ளதாக மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

நாளை (04.02.2026-, புதன்கிழமை) காலை 11.00 மணியளவில் சாக்கோட்டை அன்பு மஹாலில் மாவட்ட அவைத் தலைவர் க.நசீர்முகமது தலைமையில் தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என். நேரு, உயர் கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன் ஆகியோர் பங்கேற்க உள்ளனர்.

அதுசமயம் இக்கூட்டத்திற்கு முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தொகுதி பார்வையாளர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், மாநிலக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழகச் செயலாளர்கள். பொதுக்குழு உறுப்பினர்கள். மாநகர நிர்வாகிகள், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள். மாவட்டப் பிரதிநிதிகள். ஒன்றிய, பகுதி, பேரூர்க் கழக நிர்வாகிகள். வட்டக் கழகச் செயலாளர்கள், மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள் குறித்த நேரத்தில் தவறாமல் கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

கூட்டத்தின் பொருள்:

மார்ச் 1. தமிழ்நாடு முதல்வர், கழகத்தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழா

2. ஸ்டாலின் தொடரட்டும் தமிழ்நாடு வெல்லட்டும் மார்ச் 8 திருச்சி, மாநில மாநாடு

3. 'வெல்லும் தமிழ்ப் பெண்கள்' பிப்ரவரி மாதம் நடைபெறும் பரப்புரை

4. தமிழ்நாடு தலைகுனியாது பரப்புரை கூட்டம். திருவிடைமருதூர் 17.02.2026, பாபநாசம் தொகுதி 24.02.2026, கும்பகோணம் தொகுதி 28.02.2026.

5.கழக ஆக்கப்பணிகள்


இவ்வாறு தஞ்சை வடக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர்கள் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. அறிக்கை வெளியிட்டுள்ளார்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கே.எஸ். முருகேசன்

**பிப்ரவரி 3 (2004)**



**மாணவப் பருவத்திலிருந்தே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, கழகப் பணியாற்றியவர்.**

**கூத்தைப்பார் ஊராட்சி மன்றத் தலைவராகவும், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கித் தலைவராகவும், திருவெறும்பூர் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**1977ல் திருவெறும்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு, மக்கள் பணியாற்றியவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பி. முருகேசன்

**பிப்ரவரி 3 (2003)**



**இளம்வயதிலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு, காஞ்சிபுரம் ஒன்றியக் கழகச் செயலாளராக தொடர்ந்து 7 முறை பொறுப்பேற்று, முப்பது ஆண்டுகள் கழகப் பணியாற்றியவர்.**

**மேல் ஒட்டிவாக்கம் ஊராட்சிமன்றத் தலைவராகவும், துணைத் தலைவராகவும் – காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**1989, 1996 ஆகிய இருமுறை காஞ்சிபுரம் தொகுதி கழக சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு காஞ்சிபுரத்தில் திருப்பாற்கடல் குடிநீர் திட்டத்தையும் – பாலாற்றின் குறுக்கே உயர் மட்ட பாலங்களையும் கழக ஆட்சியில் கொண்டு வந்தார்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**